மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்சினை குறித்து. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்தப் பொருள் குறித்தது அல்ல. வேறு பொருள் குறித்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு பிரச்சினை குறித்தது. இது இல்லை. வேறு பிரச்சினை. (குறுக்கீடுகள்)*

9. பவானி ஆற்றின் குறுக்கே கேரள அரசு தடுப்பணைகள் கட்ட எடுக்கும் முயற்சிகளை நிறுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன நீங்கள், உட்காருங்கள் நீங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள், உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு* statement-*ஐ இந்த அவையில் வைக்கிறார், உட்காருங்கள். எது பேசுவதாக இருந்தாலும் பிறகு வாய்ப்பு தருகிறேன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு* statement-*ஐ அவையின்முன் வைக்கிறார், உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் அணைக்கு வருகின்ற நீர் வழித் தடத்தையும், அமராவதி அணைக்கு வருகின்ற நீர் வழித்தடத்தையும் தடுத்து நிறுத்துவதற்கு பல்வேறு இடங்களில் தடுப்பணைகள் கட்டப்படுவதாக மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கவலையினை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலிருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களும் தங்கள் கவலையைத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களது அரசு எடுத்த நடவடிக்கை குறித்து இங்கே எடுத்துக் கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நடுவர் மன்றம் அதன் 5-2-2007 ஆம் நாளிட்ட இறுதி ஆணையில்

பாம்பாறு உபபடுகைக்கென 3 டி.எம்.சி. அடி நீரை கேரளாவிற்கு ஒதுக்கீடு செய்தது. இதில் பாம்பாற்றின் குறுக்கே பட்டிசேரி என்ற இடத்தில் செங்கலாறு திட்டத்திற்கு 0.80 டி.எம்.சி. அடி நீர் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கேரள அரசு 2 டி.எம்.சி. அடி கொள்ளளவு உள்ள ஓர் அணையைக் கட்டுவதற்கு கேரள முதலமைச்சர் 3-11-2014 அன்று, காணொலிகாட்சி வழியாக அடிக்கல் நாட்டியுள்ளதாக 6-11-2014 அன்று பத்திரிகைகளில் செய்திகள் வந்தவுடனேயே, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 8-11-2014 அன்று கேரளாவின் இத்தகைய திட்டம், காவேரி நடுவர்மன்ற இறுதி ஆணையை மீறும் செயலாகும் என்றும், எந்தவொரு புதிய திட்டமும் காவேரி மேலாண்மை வாரியத்தின் ஒப்புதலுடன் தமிழ்நாட்டின் முன்இசைவு பெற்ற பின்னரே செயல்படுத்தப்பட வேண்டும் என்றும், பாரதப் பிரதமர் அவர்கள் இப்பிரச்சினையில் தலையிட்டு, பாம்பாற்றின் குறுக்கே பட்டிசேரி என்னும் இடத்தில் அணை கட்டும் பணிகளை கேரள அரசு மேற்கொள்ளக்கூடாது எனவும் கேரள அரசு பாம்பாறு உப படுகையில் கட்ட உத்தேசித்துள்ள அணைகள் பற்றிய அனைத்து விவரங்களையும் தமிழகத்திற்கு அளிக்க வேண்டுமெனவும் காவேரி மேலாண்மை வாரியம் ஏற்படுத்தப்படும் வரையிலும் மற்றும் தமிழ்நாட்டின் இசைவு பெற்ற பின்னரே இத்தகைய திட்டங்களை கேரள அரசு மேற்கொள்ள வேண்டுமென கேரள அரசுக்கு அறிவுறுத்தும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேலும், பாம்பாற்றின் குறுக்கே கேரள அரசு பட்டிசேரியில் அணை கட்டும் பணிகளை நிறுத்தி வைக்குமாறும், காவேரி நடுவர் மன்ற இறுதியாணை 19-2-2013-ல் மத்திய அரசிதழில் வெளியிட்டதன்படி, காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரையிலும் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள சிவில் வழக்குகள் முடியும் வரையிலும் தற்போதைய நிலையே தொடர வேண்டுமெனவும், நடுவர்மன்ற ஆணைக்கு முரணாக எந்தவொரு திட்டப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டாமென கேரள அரசிற்கு உத்தரவிடுமாறு கோரி, உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இடைக்கால மனு ஒன்றை 28-11-2014 அன்றே தாக்கல் செய்துள்ளது.

கேரள அரசு தன்னிச்சையாக மேற்கொள்ளும் மேற்கண்ட திட்டத்தை தடுத்து நிறுத்தும் பொருட்டு 5-12-2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், பாம்பாற்றின் குறுக்கே பட்டிசேரி என்னுமிடத்தில் புதிய அணை கட்டும் எந்தப் பணியையும் கேரள அரசு மேற்கொள்ளக்கூடாது எனவும், காவேரி மேலாண்மை வாரியம் செயலாக்கத்திற்கு வரும் வரையிலும் மற்றும் தமிழ்நாட்டின் அனுமதியின்றியும் எந்தவொரு திட்டத்தையும் கேரள அரசு செயல்படுத்த முனையக் கூடாதென்றும் கேரள அரசுக்கு உரிய அறிவுரைகளை மத்திய அரசு வழங்க வேண்டுமென்று அரசினர் தனித் தீர்மானம் நம்முடைய சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

மேலும், 12-12-2014 அன்று தமிழக சட்டமன்றத்தின் தீர்மானத்தை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பி, காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கும் வரை கேரள அரசு எந்தவொரு புதிய திட்டத்தையும் எடுக்கக்கூடாது என்று அவ்வரசுக்கு அறிவுறுத்துமாறு நான் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டேன்.

இந்நிலையில், தற்போது பாம்பாற்றின் குறுக்கே பட்டிசேரியில் அணை கட்டும் பணிகளை கேரளா தொடங்கியுள்ளதாக பெறப்பட்ட செய்தியின் அடிப்படையில், நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு இப்பணிகளை உடனடியாக நிறுத்துமாறு கேரள அரசிற்கு அறிவுரை வழங்குமாறு கேட்டுக்கொண்டு, இன்று ஒரு கடிதம் அனுப்பியுள்ளேன்.

மேலும், தமிழ்நாட்டின் முன்னனுமதி பெறாமல் எந்தவொரு திட்டத்தையும் மேற்கொள்ளக்கூடாது எனவும் மற்றும் காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழு அமைக்கப்படும் வரையிலும் மற்றும் வழக்குகள் இறுதியாக்கம் பெறும் வரையிலும் கேரள அரசு எந்தவொரு திட்டத்தையும், பணிகளையும் மேற்கொள்ளக் கூடாதெனவும் கேட்டுக்கொண்டுள்ளேன்.

எனவே, பவானி ஆற்றின் குறுக்கே கேரள அரசு தடுப்பணைகள் கட்ட எடுக்கும் முயற்சிகளை உடனடியாக நிறுத்தக் கோரி மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 24-1-2017 அன்று நான் கடிதம் எழுதியுள்ளேன். அதனைத் தொடர்ந்து, தமிழக அரசால் உச்ச நீதிமன்றத்தில் கேரள அரசின் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தக் கோரி ஓர் இடைக்கால மனுவும் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் இங்கு தெரிவித்துக்கொள்கிறேன்.